## தலைப்பு 217 – நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 217 – நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** | **செயற்படுத்தப்பட்டிராத பரிந்துரை** | **இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|
| 1.6 | தொழில்நுட்ப மென்பொருள் கட்டமைப்புகள் சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், அதன் தரவுக் கட்டமைப்பினை செயற்படுத்துவதற்கு பொறுப்புடன் செயற்பட வேண்டும். | 1.6.1(அ) |

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்த ரூபா 2,350,000 கிரயமான UNCRC தரவுக் கட்டமைப்பு நிதியல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | CIGAS கட்டமைப்பின் மூலம் சுருக்கமான சொத்துப் பிரகடனத்தைப் பெறும்போது, UNCRC தரவு கட்டமைப்பில் தொடர்புடைய சொத்தின் மதிப்பு சேர்க்கப்படவில்லை என்பதும், அதை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது. | தரவு கட்டமைப்பின் பெறுமதி நிதி அல்லாத சொத்துகளின் கீழ் சரியாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் உரிய எதிர்வுகூறலின்றி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட காரணத்தால் 4 செலவின விடயங்களின் நிதியேற்பாடுகளில் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் 40 சதவீதம் முதல் 83 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் நிதி ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், 4 செலவின விடயங்களின் நிதியேற்பாடுகிளன் 54 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை மத்திய நிலையத்தின் செயல்பாடுகளை திணைக்களத்திடம் ஒப்படைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், பராமரிப்பு பணிகள் முடியும் வரை குழந்தைகளை சேர்க்க, திட்டங்களை செயல்படுத்தும் நிலையில் நிலையம் இல்லாததாலும் எதிர்பார்த்த செலவு ஏற்படவில்லை. மீதமுள்ள 4 செலவின விடயங்களின் செலவு மட்டுபடுத்தப்பட்ட காரணமாக இந்த சேமிப்புகள் ஏற்பட்டன. | உரிய எதிர்வுகூறலுடன் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்படவேண்டிய சான்றுபடுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்மான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்ற பேணிச் செல்லா்டுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றபடுத்த வேண்டிய போதிலும், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கமைய கட்டமைப்புகளை வெற்றிகரமாக பேணிச் செல்ல தேவையான வேறுபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், | நி.பி. 133(ஆ) பிரகாரம் எமது சிறிய திணைக்களம் என்பதால்உள்ளகக் கணக்காய்வு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகினால் மேற்கொள்ளப்படுவதுடன், நி.பி. 133(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அவ்வாறான மீளாய்வு இடம்பெற்றதாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வுகள்

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 முதல் 2023 வரையான காலப்பகுதியில், 32 இலங்கைக் குழந்தைகள் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பதற்காக வழங்கப்பட்டன, ஆனால் வெளிநாட்டு தத்தெடுப்பு கட்டளைச் சட்டத்தின் 10C பிரிவின்படி தத்தெடுப்பதற்காக வழங்கப்பட்ட குழந்தைகள் குறித்து தொடர்ச்சியாக 10 வருடங்களாக பின்தொடர்தல் அறிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை. | பிரிவு 10C இன் படி வெளிநாட்டவர்களிடமிருந்து முன்னேற்ற அறிக்கைகளைப் பெற ஒரு நடைமுறையொன்று நிறுவப்பட்டுள்ளது. | வெளிநாட்டு தத்தெடுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சார்ந்திருக்கும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1939 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் பல வருடங்களாகத் திருத்தப்பட்டு வந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கட்டளைச் சட்டத்தின் திருத்தம் நிறைவு செய்யப்படவில்லை. மேலும், 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க குழந்தைகளைத் தத்தெடுப்புச் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப திருத்தப்படவில்லை. | சட்டத்தில் திருத்தம் செய்ய 2 குழுக்களை நீதி அமைச்சு நியமித்துள்ளதாகவும், அந்தக் குழுக்களில் தீவிரமாகப் பங்களிப்பதன் மூலம் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும். | கட்டளைச் சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் தேவைக்கேற்ப திருத்தப்பட வேண்டும். |

## 3.2 உத்தேச அடைவு மட்டத்தினை பெற்றிராமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் பிரகாரம் 9 சிறுவர் இல்லங்களின் திருத்தப்பணிகளுக்கு ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் சுமார் ரூபா 2.1 மில்லியன் செலவில் 4 சிறுவர் இல்லங்கள் மாத்திரமே புனரமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, பௌதீக முன்னேற்றம் 44 சதவீதமான குறைந்தபட்ச அளவில் இருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதியில், திணைக்களத் தலைவர்களுடன் பொதுத் திறைசேரி நடாத்திய கூட்டத்தில், மாகாண சபைகளின் கீழ் உள்ள விடயங்களுக்கான ஒதுக்கீட்டை மாகாண சபை ஒதுக்கும், எனவே திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு மாகாண சபைகளின் கீழ் உள்ள விடயங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றும், அதற்கான எந்த ஒதுக்கீடும் செய்யப்பட மாட்டாது என்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | வருடாந்த பாதீட்டு ஒதுக்கீடுகளை முறையாக ஒதுக்கீடு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். |

## 3.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சிறுவர் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக மீளாய்வு ஆண்டில் UNICEF நிதி உதவியாகப் பெறப்பட்ட ரூபா 35,875,000 தொகையான மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 14,525,271 மட்டுமே செலவிடப்பட்டதால், ரூபா 21,349,728 அல்லது 60 சதவிகிதம் எஞ்சியுள்ளது. | கருத்துகள் தெரிவிக்கப்படவில்லை. | அதிகபட்ச நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் வெளிநாட்டு உதவிகள் செயற்திறனாக செலவிடப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுவர்களுக்கான பயிற்சி மூலம் சமூகமயமாக்கலுக்கான பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள் தேசிய மத்திய நிலையம் மற்றும் 2 தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மத்திய நிலையங்கள் 2023 யூன் 06 ஆந் திகதி மீள கையகப்படுத்தப்பட்ட போதிலும், பௌதீக வளங்களும் சுற்றுப்புறச் சூழலும் மீளமைக்கப்பட்டு பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படவில்லை. | பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை சேவை மத்திய நிலையத்தின் புனரமைப்பிற்காக கட்டிடத்தின் பழுதுபார்க்கும் பணிக்காக நிதியேற்பாடு ADB மற்றும் UNICEF ஆகியவற்றிலிருந்து பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை சேவை மத்திய நிலையத்தினை துரிதமாக புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மத்திய நிலையத்தில் 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய அனைத்து குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் கூடிய இரண்டு விரிவுரை அரங்குகள் விளைவற்று இருந்தன. | குறித்த மத்திய நிலையத்தில் தற்போது திட்டமிடப்பட்டுள்ள பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிலையத்தின் பணிகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதற்கேற்ப விரிவுரை மண்டபங்களும் மீண்டும் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | துரிதமாக பழுதுபார்த்து, மத்திய நிலையத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவி 2014 ஆகஸ்ட் முதல், மற்றும் நன்னடத்தை அலுவலர் பதவி 2017 முதல் வெற்றிடமான உள்ளன. | சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் நன்நடத்தை உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையை மறுபரிசீலனை செய்ய அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | திணைக்களத்தின் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |